# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1893/32 - 2014 දෙසැම්බර් මස 17 වැනි බදාදා - 2014.12.17

*1893/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

*2014 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி ஒதுக்கீட்டு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம்*

வட மாகாண மாகாண சபையின் 2014 ஆம் நிதியாண்டுக்குரிய செலவினங்கள் விடயமாக கௌரவ ஆளுநரால் 2013.12.21 ஆந் திகதியில் அங்கீகாரம் வழங்கப்பட்ட செலவினத்துக்கு ஒரு குறைநிரப்பு ஏற்பாடாக முதலாவத பின்னிணைப்பில் இசைவுப்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குரிய விதிமுறைகளை ஏற்பாடு செய்வதும், அத்தகைய பணிகளின் போது நடப்பு வருட அனைத்து செலவினங்களின் தேவைகளுக்குமான மாகாண சபை நிதியத்திலிருந்தோ அல்லது மாகாண சபையினால் பிரயோகத்திற்கு எடுக்க முடியுமாகிய ஒரு சேமக் கையிருப்பு நிதியத்தினால் அல்லது நிதியங்களினால் முற்பணமாக கொடுப்பனவு செய்வதற்கு இடமளிக்கக் கூடியதும் மற்றும், மாகாண சபையின் திரட்டு நிதியத்திற்கு அப்பணத்தை மீளச் செலுத்துவதற்குமான விதிமுறைகளை ஏற்பாடு செய்வதும் அதனுடன் தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர் விளைவான விடயங்களுக்கும் உரிய விதிமுறைகளை ஏற்பாடு செய்வதற்குமான நியதிச்சட்டம் இதுவாகும்.

வட மாகாண மாகாண சபையினால் இந்த நியதிச்சட்டம் பின்வருமாறு ஆக்கப்படுகின்றது :-

1. இந்நியதிச்சட்டம் 2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி ஒதுக்கீடு (குறைநிரப்பு ஏற்பாடுகள்) நியதிச்சட்டம் என குறிப்பிடப்படும். சுருக்கப் பெயர்.

2. ஒரு தொகை நிதியை செலவு செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட பிறிதொரு சட்டத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த நியதிச்சட்டத்தில் நிதியாண்டு எனக் குறிப்பிடப்படும் 2014, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2014, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால வரையறைக்குரிய செலவினங்களுக்கென 2013.12.21 ஆந் திகதியில் கௌரவ ஆளுநரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட செலவினங்களுக்கு மேலதிகமான ஒரு குறைநிரப்பு ஏற்பாடாக இந்நியதிச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொகை ஆயிரத்து எழுநூற்று இருபத்து ஐந்து மில்லியன் அறுநூற்று மூன்று ஆயிரத்து ஐந்நூற்று இருபத்து இரண்டு ரூபா (ரூபா 1,725,603,522) என்ற வரையறைக்குள் வட மாகாண சபையின் செலவினங்களை, 2014 நிதி யாண்டுக்கான ஒதுக்கீடு குறைநிரப்பு ஏற்பாடுகள்.

   (அ) வட மாகாண நிதிகளிலிருந்தோ அல்லது நிதி வகைகளிலிருந்தோ ;

   அல்லது

   (ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு சரத்து 154 (ண) இன் பிரகாரம் ஒதுக்கப்படும் நிதி மற்றும் இலங்கை அரசின் ஒதுக்கம் அல்லது கொடுப்பனவுகளில் இருந்தோ கொடுப்பனவு செய்தல் .

3. கௌரவ ஆளுநரினால் 2013.12.21 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நியதிச்சட்டத்தின் 2 ஆம் அட்டவணையில், 2014 ஆம் ஆண்டின் இறுதியில் ஏதேனும் முற்பணக்கணக்கு நடவடிக்கைகளின் ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள்.

சீ. வீ. கந்தையா சிவஞானம்,
தவிசாளர்,
வட மாகாணம் மாகாண சபை.

அ. சிவபாலசுந்தரன்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வட மாகாண மாகாண சபை.

01- 122



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.